உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

இலங்கை

# வரி செலுத்துநர் சாசனம்



www.ird.gov.lk

***உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முன்வைப்பு***



*வரி விதிப்பில் வெளிப்படையான நியாயமான மற்றும் வரிசெலுத்துநரை மையப்படுத்திய அணுகுமுறையை வளர்ப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டில் முக்கியமான மைல்கல்லாகவுள்ள வரிசெலுத்துநர் சாசனத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வரிசெலுத்துநர்களாகிய உங்களுடனான எங்கள் தொடர்புகளுக்கு வழிகாட்டும் கொள்கைகள் மற்றும் உரிமைகளை கோடிட்டு காட்டும் இந்த ஆவணத்தை சமர்ப்பிப்பதில் வரித் துறையின் தலைவராக பெருமை அடைகின்றேன்.*

*வரிவிதிப்பானது சமூகத்தின் எந்தவொரு செயற்பாட்டிலுள்ள அடிப்படை அம்சம் என்பதுடன் அது நம்பிக்கை, பரஸ்பர மதிப்பளிப்பு, மற்றும் தெளிவான தொடர்பாடல் என்பவற்றில் கட்டியெழுப்பப்பட்ட வரிசெலுத்துநர்கள் மற்றும் வரி அதிகாரிகளிடையேயான தொடர்புகளுக்கு மிகவும் முக்கியமானது என்பதையும் நாம் புரிந்துகொண்டுள்ளோம். வரிசெலுத்துநர் சாசனமானது இந்த கொள்கையுடன் எமது நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் ஒத்துப்போவதை உறுதிசெய்யும் ஒரு திசையறிகருவியாக செயற்படுகின்றது.*

*இச் சாசனமானது உயர்தரமான சேவையை உங்களுக்கு வழங்குவதில் எங்கள் உறுதியான அற்பணிப்பை பிரதிபலிக்கின்றது. நீங்கள் எங்களிடமிருந்து எதிர்பார்க்ககூடியவற்றையும் நாங்கள் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பதையும் தெளிவாக புரியவைத்து உங்கள் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றையும் தெளிவுபடுத்துகின்றது. மேலும், இச் சாசனமானது எமது சேவைகளை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான பின்னூட்டல்கள் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்து ஓர் திறந்த உரையாடலுக்கான ஒரு அடித்தளத்தையும் அமைக்கின்றது.*

*வரிசெலுத்துதல் ஒரு கடப்பாடு என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்த செயற்பாட்டை இயலுமானவரையில் எளிமையாக, வினைத்திறனுடன் சமத்துவமானதாக ஆக்குவது எமது கடமையாகும். இவ் வரிசெலுத்துநர் சாசனமானது, எங்கள் வரி நிருவாகம் நெறிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அணுகத்தக்கது என்பதையும் உங்கள் தேவைகளுக்கு பதிலளிக்கூடியதாக இருக்கின்றது என்பதையும் உறுதிசெய்வதற்கு எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது. தெளிவான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதல், வினைத்திறனான சேவைகளை வழங்குகதல், மற்றும் ஒவ்வொரு வரிசெலுத்துநரையும் நேர்மையாகவும் பாரசபட்சமின்றியும் நடாத்துதல் ஆகிய எமது பொறுப்புக்களை இது வலியுறுத்துகின்றது.*

*வரிவிதிப்பின் சிக்கல்தன்மையை தீர்ப்பது சவாலான ஒரு செயன்முறையாகும். ஆகவே, நாம் இந்த சாசனத்தை அனைத்து வரிசெலுத்துநர்களும் இலகுவாக விளங்கிக்கொள்வதற்காக எளிமையான மற்றும் இலகுவான மொழியில் வழங்குவதற்கு முயன்றுள்ளோம். உங்கள் உரிமைகள், கடப்பாடுகள் மற்றும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு கிடைக்க கூடிய வழிமுறைகள் பற்றிய அறிவினை இது உங்களுக்கு வழங்குமாகையால், இந்த உள்ளடங்கங்களை அறிந்துகொள்வதை நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.*

*இந்த ஆவணம் நிலையானது அல்ல; இது வரிசெலுத்தநர்களின் மாறிவரும் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை ஈடுபடுத்தும் ஒரு தொடர்ச்சியான அர்ப்பணிப்பாகும். வரிசெலுத்துநர் சாசனமானது ஏற்புடையதாகவும் வினைத்திறனானதாகவும் தொடர்ந்து காணப்படுவதை உறுதிசெய்வதற்கு நாம் எமது நடைமுறையளை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதுடன் அவற்றை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவோம்.*

*ஒருங்கிணைந்த மற்றும் வெளிப்படைதன்மையான வரி முறைமை நோக்கிய பயணத்திற்கு எங்களுடன் இணைவதற்கு உங்களை நாம் அழைக்கின்றோம். ஒன்றாக தொழிற்படுவதன் மூலம் நாம் இணக்கப்பாட்டினை இயலச்செய்யும், வரிசெலுத்துநர்களின் உரிமைகள் பாதுகாக்கும், வரி விதிப்பின் சுமை சமமாக பகிரப்படும் ஓர் சூழலை நாம் வளர்த்துக்கொள்ளலாம்.*

*இந்த வரிசெலுத்துநர் சாசனத்தை வெற்றிகரமாக நிறுவுவதற்கு பங்களித்த அனைவருக்கும் எனது நன்றிகள். இச் சாசனத்தை தயாரிப்பதில் முக்கிய பங்களிப்பை நல்கிய திரு என். எம். எம். மிப்லி – பிரதி ஆணையாளர் நாயகம் (வரிக் கொள்கைகள்), திரு எம். எஸ். எம் சியான் - பிரதி ஆணையாளர் நாயகம் (பா.வ.பி) மற்றும் திரு சந்தோஷ் தமிழினியன் - உதவி ஆணையாளர் ஆகியோருக்கு எனது சிறப்பான நன்றிகள்.*

*உங்கள் ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கைக்கு எனது நன்றிகள். எங்கள் நாட்டின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்கு உங்கள் பெறுமதிமிக்க பங்களிப்பை வரவேற்கின்றோம்.*

*டி ஆர் எஸ் ஹப்புஆராச்சி*

*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்*

*2023, ஜூன் 10*

## உள்ளடக்கம்


*1.0* அறிமுகம் ........ 4

*2.0* நோக்கு, செயல் நோக்கு, பிரதான விழுமியங்கள் ........ 5

*2.1* எங்கள் நோக்கு ........ 5

*2.2* எங்கள் செயல் நோக்கு ........ 5

*2.3* எங்கள் பிரதான விழுமியங்கள் ........ 5

*3.0* உங்கள் உரிமைகள் ........ 7

*3.1* நியாயமாக மற்றும் நேர்மையாக நடாத்தப்படுவதற்கான உரிமை ........ 7

*3.2* தொழில்நிபுணத்துவ சேவை மற்றும் உதவிக்கான உரிமை ........ 7

*3.3* திருத்துவதற்கான உரிமை ........ 8

*3.4* பிரதிநித்துவத்திற்கான உரிமை ........ 9

*3.5* அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மை பேணுவதற்கான உரிமை ........ 9

*3.6* தகவல் அறிவதற்கான உரிமை ........ 10

*3.7* உதவி பெறுவதற்கான உரிமை ........ 10

*3.8* காரணங்கள் மற்றும் மீளாய்விற்கான உரிமை ........ 11

*3.9* அணுகலின் இலகு பயன்பாட்டிற்கான உரிமை ........ 11

*4.0* உங்கள் கடப்பாடுகள் ........ 12

*4.1* உண்மையாக இருப்பதற்கான கடப்பாடு ........ 12

*4.2* தேவையான பதிவுகளை பராமரிப்பதற்கான கடப்பாடு ........ 12

*4.3* உரிய நேரத்தில் கோப்பிட்டு வரியை செலுத்துவதற்கான கடப்பாடு ........ 12

*4.4* ஒத்துழைப்பை நல்குவதற்கான கடப்பாடு ........ 13

*5.0* வழங்கப்படும் எங்கள் சேவைகள் ........ 14

*5.1* இ-சேவை ........ 14

*5.2* வரிசெலுத்துநர் சேவை நிலைய பிரிவுகள் ........ 14

*5.3* அழைப்பு நிலையம் ........ 15

*5.4* வழங்கப்படும் சேவைகள் ........ 15

## *1.0* அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் வருவாய் ஈட்டுவதில் முன்னணி நிறுவனமாக திகழும் உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, நாட்டின் நிதித் தேவைப்பாடுகளை உறுதி செய்வதில் மட்டுமன்றி நாட்டின் செல்வம் மற்றும் சுபீட்சத்தின் நிலைபேறுத்தன்மைக்குமான முக்கிய பங்கினை வகிக்கின்றது. உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது வரிவிதிப்பிற்கு ஏற்புடைய வழிகள் மற்றும் வரி நிருவாகம் என்பவற்றை உறுதிசெய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்கள் நோக்கியும், அதன் நன்மைக்கும் பங்களிக்கின்றது. நியதிச்சட்டங்களால் வரையறுத்துக் கூறப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் நாட்டின் வரிசெலுத்துநர்களாக, நீங்கள் முக்கிய பங்கினை வகிப்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது பரஸ்பர மற்றும் கண்ணியமான உங்களுடனான உறவை உறுதிபடுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

உங்களுடனான எங்கள் உறவு பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டது,

- உரிய நேரத்தில் பரஸ்பர கண்ணியத்துடன் தொழில்நிபுணத்துவத்துடன் உங்களுக்கு சேவையாற்றுதல்
- உங்களை நியாயமான முறையில் நடாத்துதல்
- உங்களின் முன்னைய இணக்கப்பாடுகள் மற்றும் தற்போதுள்ள நிலைமைகளில் ஈடுபடுதல்
- எங்கள் செயற்பாடுகளை வரிசெலுத்துநர் நட்பாண்மையுடன் வழங்குதல்
- செயல்வினை பங்கேற்புக்கு சிறந்த உதவுகின்ற முறைமையினை வழங்குதல்
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்

இந்த வரிசெலுத்துநர் சாசனமானது, பரஸ்பர பொருத்தப்பாடுடைய உங்கள் கடமைகள் மற்றும் கடப்பாடுகளை வலியுறுத்துகின்றது. இது, வரி விதிப்பு மற்றும் வரி நிருவாகம் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து நீங்கள் எதிர்பார்க்க கூடியவை தொடர்பில் உங்களுக்கு புரிதல் ஒன்றை வழங்குகின்றது. அதனை முழுமையாக நிறைவேற்றுவதில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம்.

இந்த சாசனமானது, வரி விதிப்பு மற்றும் வரி நிருவாகம் தொடர்புடனான எந்தவொரு விடயத்திலும் உங்களுடன் அல்லது உங்கள் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுடனான எங்களது நடத்தையை விளக்குகின்றது. இச் சாசனமானது வரிசெலுத்துநர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் குறிப்பிடுகின்றது. “உங்களை” என்பது தனிப்பட்டமுறையில் உங்களையும் உங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நீங்கள் ஊக்குவித்த அனைவரையும் குறிக்கின்றது.

இந்த வரிசெலுத்துநர் சாசனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு நாம், தொழில்சார் முறையில் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றோம்.

## *2.0* நோக்கு, செயல் நோக்கு, பிரதான விழுமியங்கள்

### *2.1* எங்கள் நோக்கு

*வரி செலுத்தும் பொதுமக்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள பதவியினரைக் கொண்டு, வரி செலுத்துநர் நட்பு வரி நிருவாக சேவை வழங்குனராக இருத்தல்.*

### *2.2* எங்கள் செயல் நோக்கு

*வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்புக்களினை தடுக்கும் அதே வேளை தன்னார்வ இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் வரி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் நியதிகளுக்கு அமைவாக வரிகளைச் சேகரித்தல்*

*மற்றும்*

*நியாயமான, நட்புரீதியான மற்றும் விரைவான முறையில் ஏற்புடைய வரி மற்றும் அது தொடர்பான சட்டங்களை நிருவகிப்பதன் மூலம் வரி முறைமையின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்து, அதன் மூலம் நன்மைபயக்கும் வரி கலாசாரத்தை அதிகரிக்கச்செய்தல்*

### *2.3* எங்கள் பிரதான விழுமியங்கள்

*தொழில் நிபுணத்துவம்:* எங்கள் செயற்பாடுகளை அதியுயர் மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு ஊழியர்களின் செயற்பாங்கு, மனப்பாங்கு மற்றும் நடத்தையினை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

*பதிலளிக்கும் தன்மை:* சரியான நேரத்தில் முடிவுகளை எடுப்பதன் மூலம் அனைத்து பங்குதாரர்களுக்கும் உரிய நேரத்தில் உதவியையும் சேவையையும் வழங்க முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

*நேர்மை:* அனைத்து பங்குதாரர்களுக்கும் எமது கடமையை நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் பரஸ்பர மரியாதையுடனும் மேற்கொள்கின்றோம்.

*பொறுப்புக்கூறல்:* திணைக்களத்தின் கூட்டிணைக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு எமது செயற்பாடுகளுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் நாம் பொறுப்பேற்கின்றோம்.

புத்தாக்கம்: சிக்கலான சவால்களுக்கு தனித்துவமான தீர்வுகளை எடுப்பதற்கு வழமையான தடைகளை தாண்டி ஆராய எமது பணியாளர் குழாமை ஊக்குவிக்கின்றோம்.

ஒத்துழைப்பு: பொது இலக்குகளை அடைவதற்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள பங்குதாரர்களுடன் முனைப்பான பங்கேற்பினை ஊக்குவிக்கின்றோம்.

# *3.0 உங்கள் உரிமைகள்*

## *3.1 நியாயமாக மற்றும் நேர்மையாக நடாத்தப்படுவதற்கான உரிமை*

- நாம் மிகவும் நாணயத்துடனும் நம்பிக்கையுடன் நடந்துகொள்ளும் அதே வேளை, உங்களை உரிய மரியாதையுடனும் கவனத்துடனும் நடாத்துவோம். இலங்கையின் வரிசெலுத்தநர்களின் பரந்துபட்ட இயல்பினைக் கருத்தில் கொண்டு நாம் சார்பற்ற முறையில் நடந்துகொள்வோம்.
- உங்கள் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இயலுமானவரையில் விரைவாக நியாயமான முறையில் உங்கள் கவலைகள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நியாயமான மற்றும் சமத்துவமான தீர்மானங்களை எடுப்பதற்கு நாம் முயற்சிப்போம்.
- வேறு காரணங்களினால் மாற்றம் எதுவும் காணப்பட்டால் அன்றி, நீங்கள் வழங்கும் தகவல்கள் முக மதிப்பில் பூரணமானவை எனவும் சரியானவை எனவும் நாம் கருத்தில் கொண்டு, நீங்கள் வழங்கும் அத்தகவல்களின் அடிப்படையில் நாம் உங்கள் வரிப் பொறுப்பினை மதிப்பீடு செய்கின்றோம்.
- மனிதர்கள் எனில் பிழைகள் நடைபெற வாய்ப்புகள் உள்ளது என்பதை நாம் அறிவோம். எங்களினால் அத்தகைய பிழைகளை தவறுகள் எது எனவும் வேண்டுமென்றே செய்யும் செயல்கள் எது எனவும் பகுத்தாராய முடியும்.
- நாம் உங்கள் விளக்கங்களை நியாயமான முறையில் கேட்டு அத்தகைய விளக்கங்களை கருத்தில் எடுத்துக்கொள்வோம்.
- நாம் நிருவகிக்கும் நியதிச்சட்டங்களுடன் ஒவ்வொரு வரிசெலுத்துநர்களும் இணங்கி ஒழுகுவதை உறுதிசெய்கின்றோம்.
- உங்களால் தரப்பட்ட தகவல் தொடர்பில் மீளாய்வு நடக்கும்போது நீங்கள் நேர்மையற்றவர்கள் என நாம் கருதுவதில்லை. முரண்பாடுகள் எதுவும் அடையாளம் காணப்பட்டால் மட்டுமே பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## *3.2 தொழில்நிபுணத்துவ சேவை மற்றும் உதவிக்கான உரிமை*

- உங்களுடன் நாம் ஆக்கபூர்வமான மற்றும் தொழில்நிபுணத்துவ உறவை பேணுவதை உறுதிசெய்கின்றோம்.
- உங்கள் உரிமைகள் மற்றும் உரித்துகள் எவை என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள உதவுவதுடன் உங்களுக்கு தேவையான உதவிகளையும் மேற்கொள்வோம்.
- தொழில்சார் முறையில் நாம் செயற்படும் போது நாம் எம்மை அறிமுகப்படுத்துவோம்.

- உங்களுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய தொடர்பு விபரங்களை நாம் உங்களுக்கு வழங்குவதுடன் அத் தகவல்களை உடனடியாக வழங்க எம்மால் இயலாவிட்டால், நீங்கள் எமக்கு அளிக்கும் தொடர்பு விபரங்களுக்கு இயலுமான வரையில் விரைவாக கிடைக்கப்பெற உறுதிசெய்வோம்.
- நாம் உங்களுடன் தொடர்புகொள்வோம் என உறுதி செய்யும் திகதியிலும் நேரத்திலும் நாம் நிச்சயம் உங்களை தொடர்புகொள்வோம்.
- நாம் எமது குறைபாடுகளை ஏற்றுக்கொள்வதுடன் அவற்றை இயலுமான வரை விரைவாக திருத்திக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம்.
- நாம் எளிய மொழிநடையிலேயே உங்களுடன் உரையாடுவதுடன் உங்களுடைய மொழித்தேர்வின் (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) எழிய மொழிநடையிலேயே எங்கள் தொடர்பாடல்கள் காணப்படும்.
- நீங்கள் டிஜிட்டல் முறையில் தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் எங்கள் ஒத்துழைப்பை நல்குவோம்.

### *3.3* திருத்துவதற்கான உரிமை

- எமது செயற்பாடுகள் மற்றும் செயற்பாடின்மை தொடர்பில் நீங்கள் திருப்தியடையவில்லை எனில் முறைப்பாடொன்றை நீங்கள் மேற்கொள்ளலாம். எவ்வாறாயினும், வழங்கப்பட்டுள்ள தொடர்பாடல் முறைமையினைப் (தொலைபேசி அல்லது மின்னஞ்சல்) பயன்படுத்தி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருடன் அதனை தீர்த்துக் கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றது.
- அதற்கு பின்னரும் உங்களுக்கு திருப்தியின்மை காணப்படின் அல்லது ஏற்புடைய உத்தியோகத்தரிடம் அப் பிரச்சனையை எழுப்பமுடியவில்லை எனில், அவ் உத்தியோகத்தருக்கு அடுத்த நிலையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தரிடம் உங்கள் முறைப்பாட்டினை சமர்ப்பிக்கலாம்.
- உங்களின் முறைப்பாடு கையாளப்பட்டவிதத்தில் ஏதேனும் பிழையிருப்பின், நீங்கள் நேரடியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் காரியாலயத்திற்கு cgir@ird.gov.lk. எனும் மின்னஞ்சல் ஊடாக உங்கள் முறைப்பாட்டினை அனுப்பிவைக்கலாம்.
- நாங்கள் உங்கள் முறைப்பாடுகளை தீவிரமாக எடுத்துக்கொள்வதுடன், உங்களின் அத்தகைய மனக்குறைகளை விரைவாக தீர்த்துவைக்க முயற்சிப்போம்.
- இதற்கு மேலதிகமாக, எங்களது சேவை தொடர்பில் செயல்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்த உதவக்கூடிய உங்கள் பின்னூட்டல் மற்றும் ஆலோசனைகளை நாம் வரவேற்கின்றோம்.

### 3.4 பிரதிநிதித்துவத்திற்கான உரிமை

- உங்களது அலுவலகள் தொடர்பில் எங்களுடன் தொடர்புகொள்வதற்கு நீங்கள் தொழில்நிபுணத்துவ உதவியை நாடலாம் (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்– 115 ஆம் பிரிவு).
- பல்வேறுபட்ட வரி வகைகள் போன்ற பல்வேறுபட்ட தேவைப்பாடுகளுக்கு, நீங்கள் பல்வேறுபட்ட பிரநிதித்துவத்தை தெரிவு செய்யலாம். ஆனால், உங்கள் பிரதிநிதித்துவம் தொடர்பில் உரிய முறையில் எமக்கு அறித்தல் வேண்டும்.
- வரி விபரத்திரட்டுக்களை மற்றும் கூற்றுக்களை, ஆட்சேபனைகளை, நிர்வாக மீளாய்வுகளை தயாரிக்க மற்றும் பொதுவில், வரி தொடர்பான விடயங்களில் அத்தகைய தொழில்நிபுணத்துவ உதவி உங்களுக்கு தேவைப்படலாம்.
- அத்தகைய தொழில்முறை உதவி இருந்த போதிலும், பதிவு செய்யப்பட்ட முகவர் உட்பட வேறு எவரேனும் அத்தகைய தகல்களை தயாரிக்க உதவி செய்த போதிலும், உங்களால் தரப்பட்ட தகவலின் துல்லியதன்மைக்கு நீங்களே பொறுப்புடையவர்களாவீர்கள்.

### 3.5 அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மை பேணுவதற்கான உரிமை

- வரி விதிப்பு மற்றும் வரி நிர்வாக தேவைப்பாட்டிற்கு, உங்களிடமிருந்து அல்லது உங்கள் பிரதிநிதிகள் அல்லது வேறு நிறுவனங்கள் போன்ற வேறு ஏதேனும் மூலங்களிலிருந்து சேகரிக்கப்படும் தகல்கள் உங்கள் அந்தரங்கம் மற்றும் இரகசியத்ன்மை பேணுவதற்காக அவை இரகசியமாக பேணப்படும்.
    - சட்டத்தினால் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு மட்டுமே அத்தகைய தகவல்கள் வெளிப்படுத்தப்படும். (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்– 100 ஆம் பிரிவு).
- நாம் உங்கள் சொந்த பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத்தில் தீவிர கவனமாக இருப்போம். எங்களுடனான உங்களது இணையவழி தரவுப் பரிமாற்றத்தினை பாதுகாப்பாக பேணுவதை உறுதிசெய்ய எங்களிடம் படிமுறைகள் காணப்படுகின்றன.
- உங்கள் அந்தரங்கம் அல்லது இரகசியத்தன்மை பேணப்படவில்லை என நீங்கள் கருதுமிடத்து, முதலாவதாக நீங்கள் அத்தகவலைவழங்கிய அல்லது ஏற்புடைய உங்கள் தகவலை கையாண்டிருக்க கூடும் என நீங்கள் கருதும் ஏற்புடைய உத்தியோகத்தரை தொடர்புகொண்டு அதனை கூறுதல் வேண்டும்.
- அவ் வரி உத்தியோகத்தரின் பதிலில் நீங்கள் திருப்தியடையவில்லை எனில், நீங்கள் உங்களது முறைப்பாடுகளை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு cgir@ird.gov.lk. எனும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கலாம்.

## 3.6 தகவல் அறிவதற்கான உரிமை

- உங்கள் கோரிக்கையின் பிரகாரம், வரிப் பொறுப்புத் தொடர்பில் உங்களது நிலவரம் தொடர்பில தகவல்களைத் வழங்குவோம் என்பதுடன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 118 ஆம் பிரிவு பிரகாரம் உங்களால் கோப்பிடப்பட்ட வரி விபரத்திரட்டின் பிரதி ஒன்றை அல்லது ஆணையாளர் நாயகத்துடன் நீங்கள் மேற்கொண்டுள்ள எழுத்துமூல ஒப்பந்தத்தின் பிரதி ஒன்றினை வழங்குவோம்.
- இதற்கு மேலதிகமாக எமக்கு தீர்மானங்களை எடுக்க உதவும் பொதுக் கட்டளைகள், சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டிகள் போன்ற ஆவணங்களை எங்கள் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். உங்களினால் எங்களது இணையவழி முறைகளின் ஊடாக எங்களது ஏதேனும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனில் முதலில் எங்களை தொடர்பு கொள்ளவும். பொதுவாக பயன்படுத்தப்படும் ஆவணங்களின் பிரதிகளை, தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையின்றி எம்மால் வழங்கமுடியும்.
- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டமும் குறிப்பிட்ட தகவல் உத்தியோகத்தரிடம் உங்கள் கோரிக்கையை நெறிப்படுத்தக் கூடிய குறிப்பிட்ட தகவல்களை கோருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
- எவ்வாறாயினும், விசாரணை ஒன்றுக்கு பங்கத்தினை ஏற்படுத்தும் என அல்லது சட்டத்தை முறையாக நிருவகிப்பதற்கு தடை செய்யும் என பெருமளவில் கருதக்கூடிய வெளிப்படுத்தல்களை 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினால் விலக்களிக்கப்பட்டுள்ள காரணத்தினால் அத் தகவல்களை எங்களினால் வழங்கமுடியாது.

## 3.7 உதவி பெறுவதற்கான உரிமை

- உங்கள் உரிமைகள் மற்றும் உரித்துகள், மற்றும் உங்கள் கடப்பாடுகளை எதிர்கொள்வதை விளங்கிக்கொள்வதற்கு உதவக் கூடிய துல்லியமான, நிலையான மற்றும் தெளிவான தகவல்களை நாம் வழங்குவோம்.
- எங்கள் தகவல்கள், பெதுவில் சட்டம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்பது முதல் உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைக்குப் பொருத்தப்பாடுடைய ஆலோசனை வரையிலான பிரசுரிக்கப்பட்ட தகல்கள் ஆகும்.
- எங்கள் பிரசுரிக்கப்பட்ட தகவல்கள் உங்கள் தேவைப்பாடுகளை முழுவதுமாக நிறைவேற்றவில்லை என நீங்கள் கருதினால் அல்லது அது எவ்வாறு உங்களுக்கு பிரயோகிக்கப்படலாம் என்பதை சரியாக அறிந்துகொள்ளமுடியவில்லை எனில், உங்கள்

தேவைகளுக்குகான உரிய தகவல் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள நாம் உதவுவதற்கு நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளவும்.

### 3.8 காரணங்கள் மற்றும் மீளாய்விற்கான உரிமை

- நாம் நிர்வகிக்கும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்களின் பிரகாரம் எமது நடவடிக்கைகள் மற்றும் தீர்மானத்திற்கான காரணங்களை நாம் வழங்குவோம்.
- அத்தகைய காரணங்கள் உங்கள் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கப்படும்.
- எங்கள் காரணங்கள், எங்கள் நடைமுறைகள் மற்றும் தீர்மானங்களுக்கு பின்னால் இருக்கும் பகுப்பாய்வினை தெளிவுபடுத்தும்.
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 139 ஆம் பிரிவானது மதிப்பீடு ஒன்று தொடர்பில் அல்லது வேறு ஏதேனும் முடிவு தொடர்பில் ஆணையாளர் நாயகத்தின் மீளாய்வினை கோருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 140 ஆம் மற்றும் 144 ஆம் பிரிவுகள், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு மற்றும் நீதிமன்றங்களினூடாக எமது தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது.

### 3.9 அணுகலின் இலகு பயன்பாட்டிற்கான உரிமை

- உங்கள் இணக்கப்பாடு நேரடியாக இருப்பதை உறுதி செய்ய முயற்சிப்பதுடன் உங்கள் கடப்பாடுகளுடன் இணங்கி ஒழுகவும் ஏற்பாடு செய்கின்றோம்.
- குறைக்கப்பட்ட வேலைப்பழு, நேரம் மற்றும் முயற்சியில், ஈடுபடுவதை முக்கியமாக இ-சேவைகளினைப் பயன்படுத்துவதை உறுதி செய்கின்றோம்
- ஏற்புடைய மற்றும் உரிய நேரத்திலான சேவையினை வழங்குவதற்கு எமது டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பத்தை மேம்படுத்த முயற்சிக்கின்றோம்.
- உங்களுக்கு இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக்கொள்வதற்காக வரிவிதிப்பு மற்றும் வரி நிரர்வாகம் தொடர்பிலான விடயங்களை இலகுபடுத்தும் நடைமுறைகள், வழிகாட்டல் மற்றும் ஏனைய மூலங்களை நாம் பிரசுரிப்பதுடன் அவற்றினை விநியோகிக்கின்றோம்

## 4.0 உங்கள் கடப்பாடுகள்

### 4.1 உண்மையாக இருப்பதற்கான கடப்பாடு

- வரியிடலானது, உங்கள் விபரத்திரட்டுக்கள், கூற்றுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களின் துல்லியத்தன்மையை உள்ளடக்கிய உங்களால் வழங்கப்படும் தகவல்களிலேயே தங்கியுள்ளது.
- முழுமையான தகவல்களை வழங்குதல் மற்றும் கேட்கப்படும் கேள்விகளுக்கு துல்லியம் மற்றும் நேர்மையை உறுதிபடுத்தி முழுமையாகவும் விரிவாகவும் பதிலளித்தல் என்பவை முக்கியமாகும்
- தகல்களை வழங்கும் போது அதன் பூரணத்துவம் மற்றும் துல்லயதன்மை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.
- உங்களால் வழங்கப்பட்ட தகவல்கள் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவரினால் வழங்கப்பட்ட போதும் அதற்கு நீங்களே பொறுப்புடையவர்களாவீர்கள்.

### 4.2 தேவையான பதிவுகளை பராமரிப்பதற்கான கடப்பாடு

- நியதிச்சட்டங்களினால் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேவையான ஆவணங்கள் உரிய நியமங்களில் முறையாக பராமரிக்கப்படுவதை நீங்கள் உறுதிசெய்தல் வேண்டும்.
- பதிவுகளானது, உங்கள் கடந்த காலப் பதிவுகளை கண்காணிக்கும் பொறிமுறையை உறுதி செய்வதுடன், விபரத்திரட்டு, கூற்றுக்கள் மற்றும ஏனைய ஆவணங்கள் துல்லியமாகவும் பூரணமாகவும் தயாரிக்கப்படுவதை உறுதிசெய்கின்றது.
- பொதுவில் பதிவுகள் பத்தாண்டுகளுக்கு பராமரிக்கப்படுதல் வேண்டும்.

### 4.3 உரிய நேரத்தில் கோப்பிட்டு வரியை செலுத்துவதற்கான கடப்பாடு

- வரி விபரத்திரட்டுக்கள், கூற்றுக்கள் ஆவணங்கள் மற்றும கோரப்பட்ட ஏனைய தகவல்களானது, அறிவிக்கப்பட்டவாறு உரிய பெறுநருக்கு குறித்த காலத்தில் கோப்பிடப்படுதல் வேண்டும். அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு உங்களுக்கு மேலும் நேரம் தேவைப்படின், நாம் அப்போதுள்ள சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய மேலதிக நேரத்தை வழங்குவோம்.
- உங்களுக்கு பொறுப்புடைய தொகைணை செலுத்த முடியாத சந்தர்ப்பத்திலும், விபரத்திரட்டுக்கள் மற்றும் ஏனைய தகவல்களை உரிய நேரத்தில் கோப்பிடுவது முக்கியமானதாகும்.

- நீங்கள் வரியினை உரிய நேரத்தில் செலுத்துதல் வேண்டும். அதை செலுத்துவதில் சிரமங்கள் ஏதும் இருப்பின் உரிய திகதிக்கு முன்னர் மேலதிக நேரத்திற்கு அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும்.
- நீடிக்கப்பட்ட கொடுப்பனவு ஒப்பந்தம் ஒன்றை நீங்கள் மேற்கொண்டிருப்பின், அதனால் ஏற்பட்ட வட்டி மற்றும் தண்டத்தினை நீங்கள் செலுத்த ஏற்படலாம்.

### *4.4* ஒத்துழைப்பை நல்குவதற்கான கடப்பாடு

- உங்களின் சட்டபூர்வமான கடப்பாடுகளை நீங்களே தன்னார்வத்துடன் நிறைவேற்றுவதில் எங்கள் முழு உதவியையும் வழங்குவதற்கு உங்கள் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.
- நீங்கள் தடையாகவோ அல்லது ஒத்துழைக்காதவராய் காணப்பட்டால் நாம் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதை நீங்கள் கட்டாயமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- சட்டங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு தகவல்களை முறையாக அணுகுவதற்கும் சேகரிப்பதற்கும் நீங்கள் தடையாக இருக்கும்போது அபராதங்கள் மற்றும் பிற சட்ட விதிகள் பயன்படுத்தப்படலாம்.
- நீங்கள் எங்களை பரஸ்பர மரியாதையுடனும், கரிசனையுடனும் நடத்துவீர்கள் என்று எதிர்பார்ப்பதுடன் நேர்மறையான அணுகுமுறையுடன் எங்களை வரவேற்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.
- உங்கள் ஆக்ரோஷமான நடத்தை காரணமாக எங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு ஆபத்தில் இருப்பதாக நாங்கள் கருதினால், எங்களின் பாதுகாப்பை நிலைநிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் உங்களின் பொருத்தமற்ற நடத்தைக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்போம்.

## 5.0 வழங்கப்படும் எங்கள் சேவைகள்

வரி செலுத்துவோருக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக, கொழும்பு *02*, சர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் உள்ள உள்நாட்டு இறைவரித் தலைமை அலுவலகத்தின் *1* மற்றும் *2*வது மாடிகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரி செலுத்துவோர் சேவை மையத்தை நடத்துகிறது. அதேபோன்று அனைத்து நகர கிளைகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களிலும் இத்தகைய சேவைகள் வழங்கப்படுகின்றன.

வரி செலுத்துவோர், சேவை மையத்திற்கு தமது தேவையான தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக செல்லலாம். எவ்வாறாயினும், இலத்திரனியல் சேவை *(e-service)* மூலம் கிடைக்கும் சேவைகளை முடிந்தவரை இ-சேவை போர்டல் மூலம் பெற அறிவுறுத்தப்படுகிறது. இலத்திரனியல் சேவை மூலம் கிடைக்காத சேவைகளுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சல்கள் மூலம் சம்பந்தப்பட்ட பிரிவுகளை தொடர்பு கொள்ளலாம் மற்றும் அத்தகைய சேவைகளை மின்னஞ்சல் வசதி மூலம் கோரலாம்.

### 5.1 இ-சேவை

பெரும்பாலான சேவைகளை இலத்திரனியல் சேவை *(e-service)* மூலம் உங்கள் சொந்த வீடுகள் அல்லது அலுவலகங்களில் இருந்து எப்போதும் திணைக்களத்திற்கு வருகை தராமல் பெறலாம். இலத்திரனியல் சேவைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான வழிமுறைகளை இலத்திரனியல் சேவை இனைய முகப்பில் வழங்கப்பட்டுள்ள விரிவான விரைவு வழிகாட்டிகளில் *(Detailed Quick Guides)* காணலாம்.

### 5.2 வரிசெலுத்துநர் சேவை நிலைய பிரிவுகள்

- வாடிக்கையாளர் பதிவு மற்றும் இற்றைப்படுத்தல்
  - ஆரம்ப பதிவுப் பிரிவு
  - வரி பதிவுப் பிரிவு
  - வாடிக்கையாளர் தகவல் இற்றைப்படுத்தல் பிரிவு
- இணக்க ஆதரவு சேவை மற்றும் வாடிக்கையாளர் ஊக்குவிப்புப் பிரிவு
  - வியாபார ஆலோசனைப் பிரிவு
  - வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு அலகு
  - மத்திய ஆவணப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ அலகு

## 5.3 அழைப்பு நிலையம்

வரி செலுத்துவோர் தகவல் மற்றும் வரி விவகாரங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களுக்கு ஹாட்லைன் *1944* என்ற தொலைபேசி எண்ணின் மூலம் அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். திங்கள் முதல் வெள்ளி வரை காலை *09:00* மணி முதல் மாலை *07:00* மணி வரை மற்றும் சனிக்கிழமைகளில் காலை *09:00* மணி முதல் மதியம் *01:00* மணி வரை அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## 5.4 வழங்கப்படும் சேவைகள்

| அலகு | சேவை | இ- சேவை கிடைக்கப் பெறும் தன்மை | தலைமை காரியாலயத்தில் அமைந்துள்ள இடம் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| **ஆரம்ப பதிவு பிரிவு** | வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை (*TIN*) வழங்குதல் | ஆம் | 2வது தளம் வடக்கு பிரிவு | pr@ird.gov.lk |
| | வரி முகவர் பதிவு | ஆம் | | |
| | இ-சேவை அணுகலை வழங்குதல் (*PIN/SSID*) | ஆம் | | |
| | பிரதி வ.அ.இ (*TIN*) சான்றிதழ்களை வழங்குதல் | இல்லை | | |
| **வரி பதிவுப் பிரிவு** | அனைத்து வரிகளுக்குமான பதிவு | ஆம் | 2வது தளம் தெற்குப் பிரிவு | tr@ird.gov.lk |
| | கருத்திட்டங்களுக்கான பதிவு | ஆம் | | |
| | தற்காலிக பெ.சே.வ. (*VAT*) சான்றிதழை வழங்குதல் | ஆம் | | |
| | பிரதி பெ.சே.வ. (*VAT*) சான்றிதழை வழங்குதல் | இல்லை | | |
| **வாடிக்கையாளர் தகவல் இற்றைப்படுத்தல் பிரிவு** | வரி செலுத்துவோர் பதிவு விவரங்களைப் புதுப்பித்தல் (*Profile*) | ஆம் | 2வது தளம் வடக்கு பிரிவு | ci@ird.gov.lk |
| | அனைத்து வரி வகைகளையும் செயலிழக்கச் செய்தல், மீண்டும் செயல்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல். | ஆம் | | |
| | பதிவு செய்யப்பட்ட திட்டங்களின் விரிவாக்கம் | ஆம் | | |
| | *SVAT* தொடர்பான புதுப்பிப்புகள் | இல்லை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **வியாபார ஆலோசனைப் பிரிவு** | ஆலோசனைக்காக வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு உதவுதல் | இல்லை | 2வது தளம் வடக்கு பிரிவு | bc@ird.gov.lk |
| | வரிப் பொறுப்பைக் கணக்கிட்ட பிறகு வெளிநாடுகளுக்குப் பணத்தை அனுப்புவதற்கான அனுமதியை வழங்குதல் | இல்லை | | |
| | வரிப் பொறுப்பைக் கணக்கிட்ட பிறகு இடம்பெயர்வு கொடுப்பனவுக்கான அனுமதி வழங்குதல் | இல்லை | | |
| | வரிப் பொறுப்பைக் கணக்கிட்ட பிறகு பணியாளர் ஓய்வுப் பலன்களுக்கு அனுமதி வழங்குதல் | இல்லை | | |
| **வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு அலகு** | விசா நோக்கத்திற்காகவும், வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்கும், பொதுத்துறையில் உயர் பதவி பெறுவதற்கும், நன்கொடை, மதுபான உரிமம் புதுப்பித்தல், பெ.சே.வ. (VAT) அல்லாத, வியாபார ரத்து, உள்நோக்கி பணம் அனுப்புதல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உட்பட அனைத்து பொதுவான நோக்கங்களுக்கும் வரி அனுமதி வழங்குதல் | இல்லை | 2வது தளம் தெற்குப் பிரிவு | csp@ird.gov.lk |
| | நகல் வரி அறிக்கைகளை வழங்குதல் மற்றும் செலுத்தும் சீட்டுகள் | இல்லை | | |
| | கடன் வவுச்சர்களை வழங்குதல் | இல்லை | | |
| | வரி செலுத்துவோர் விழிப்புணர்வு | இல்லை | | |
| | மக்கள் தொடர்பு | இல்லை | | |
| | துறை வெளியீடுகளின் விற்பனை | இல்லை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **மத்திய ஆவணப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ அலகு** | அனைத்து வரி வகைகளுக்கும் வரி அறிக்கைகளை சேகரித்தல் & ஒப்புகைகளை வழங்குதல் | ஆம் | *1வது தளம் தெற்குப் பிரிவு* | *cdm@ird.gov.lk* |
| | வரி மதிப்பீடுகள் தொடர்பான மேல்முறையீடுகள், ஆட்சேபனைகள் மற்றும் வினவல்களை சேகரித்தல் | ஆம் | | |
| | வரி தொடர்பான மற்ற அனைத்து ஆவணங்களையும் வசூலித்தல் | ஆம் | | |

குறிப்பு: இலத்திரனியல் சேவைகளின் கீழ் கிடைக்கும் அனைத்து சேவைகளையும் ஒரே வேலை நாளுக்குள் பெறலாம், திட்டங்களின் பதிவு மற்றும் திட்டங்களின் நீட்டிப்பு ஆகியவை அதிகபட்சம் பதினான்கு நாட்கள் வரை ஆகலாம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளின் தரம், முறை அல்லது வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் ஆகியவற்றில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் உங்கள் புகார்களை *cgir@ird.gov.lk*. எனும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கலாம்...